Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 742/2025 PW-7**

Name : மருத்துவர் மோனிஷா
Father / Husband name : தில்லைவாசகம்
Village : மதுராந்தகம்
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.05.2026

A1 to A3 present. Defence counsel present. Witness identified by VM Pettai PS HC 1967 Tr.Selvam.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுராந்தகம் அரசு பொதுமருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 25.10.2024 அன்று திண்டிவனம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது மாலை 04.00 மணியளவில் சரவணன் என்பவரை அவரின் நண்பர் ரவிக்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். அவரை முன்தினம் 24.10.2024 இரவு 07.30 மணியளவில் அவரின் வீட்டில் தெரிந்த 3 நபர்கள் கையாலும், கத்தியாலும் தாக்கியதாகவும் அதற்கு மண்ணம்பூண்டி ஆரம்ப சுகாதர நிலையத்தில் சிகிச்சை எடுத்ததாகவும் கூறினார். அவரை பரிசோதித்தபோது இடது கண் அருகில் தையில் இடப்பட்டக்காயம் இருந்தது. அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்டக்காயம் சொற்பக்காயம் என்று சான்று வழங்கினேன். **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட நபர் சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டக்காயம் இருச்சக்கர வாகனத்திலிருந்து கீழே

விழுந்தால் கம்பி மோதி ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து கருத்துரை பெற்றார்களா என்றால் பெற்றார்கள்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.